Registered as a Newspaper
பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்


சுடர் : 39
கதிர் : 244
சனிக்கிழமை
27 ஜூலை 2024
ஆடி 11
வள்ளுவர் ஆண்டு 2055



முச்சந்தி முனி

பான் விலையைக் குறைச்சு சனத்தை பணியச் செய்யிற பிளானோ?

# ஜனாதிபதித் தேர்தல்




## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

# செப். 21

**கொழும்பு, ஜூலை 27**

**சிறிலங்கா ஜனாதிபதித் தேர்தல் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவால் நேற்றுக் காலை அறிவிக்கப்பட்டுள்ளது.**


11



## பாணின் விலை ரூ.10 குறைப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 27
பாணின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக, இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என். கே. ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.
எரிவாயு மற்றும் மின்கட்டணம் என்பன அண்மையில் குறைக்கப்பட்டன.

11



## ஜனாதிபதி ரணில் தரப்பு நேற்றுக் கட்டுப்பணம்

### காலியில் வைத்து இன்று அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 27
ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தரப்பிலிருந்து நேற்றுச் செலுத்தப்பட்டுள்ளது.
ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்

11

## நாங்கள் செய்தது சரியே!

### மல்லுக்கட்டுகிறார் சபாநாயகர்

கொழும்பு, ஜூலை 27
பொலிஸ் மா அதிபர் நியமனத்தில் எந்தத் தவறான தீர்மானத்தையும் எடுக்க

11

## இளைஞனைக் கடத்தி வாள்வெட்டுத் தாக்குதல்

### உரும்பிராயில் வெறிச்செயல்

யாழ்ப்பாணம், ஜூலை 27
யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியில் இளைஞன் ஒருவனை கடத்திச்சென்ற கும்பல் வாளால் வெட்டி சித்திரவதை செய்த சம்பவமொன்று நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.
இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

11



## ஒலிம்பிக் ஆரம்பம்! பரிஸ் விழாக்கோலம்

பரிஸ், ஜூலை 27
ஒலிம்பிக் போட்டிகள் பிரான்ஸின் தலைநகர் பரிஸில் நேற்றுக் கோலாகலமாக ஆரம்பித்தன.
'ஒளிரும் நகரம்' எனப் பெயர்பெற்ற பரிஸ் நகரம் ஒலிம்பிக் தொடரை முன்னிட்டு விழாக்கோலம் பூண்டிருந்தது. தனித்துவமான அலங்கரிப்புகள் நகர் முழுவதும் மேற்கொள்ளப்பட்

11

### கனேடியக் குடும்பம் மீது

## கூலிப்படையை ஏவிய பெண் நேற்றுக் கைது!

### ஒருவருடத்தின் பின் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 27
யாழ்ப்பாணம் அனலைதீவில் கனேடியத் தமிழ்க் குடும்பம் மீது வன்முறைக் கூலிப்படைக்கும்பலொன்று நடத்திய தாக்குதல் மற்றும் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் பிரதான சந்தேகநபர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார்.

11

### பொலிஸ்மா அதிபர் விவகாரம்

## சட்டச் சிக்கல்களாம்: நழுவிய ஜனாதிபதி!

கொழும்பு, ஜூலை 27
சட்டச்சிக்கல்கள் காரணமாக, பொலிஸ்மா அதிபர் விடயத்தில் தான் விலகியிருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு

11

## ட்ரூடோவுக்கு கண்டனமாம்!

கொழும்பு, ஜூலை 27
வரலாற்றில் கறுப்பு ஜூலை என்று அறியப்படும், இலங்கையின் இனக்கலவரங்கள் தொடர்பில்கனேடியர்பிரதமர்ட்ரூடோ

11

## ஜனாதிபதி ரணில் தப்பவே முடியாது

### சஜித் முழக்கம்

கொழும்பு, ஜூலை 27
பொலிஸ்மா அதிபர் விவகாரத்தில் ஜனாதிபதி ரணில் தன் பொறுப்பிலிருந்து விலகி ஒளித்தோட முடியாது. அவரால் தீர்வொன்றைத் தேடமுடியாவிடின் பதவி விலகவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
பொலிஸ்மா அதிபரின் நிய

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்தகத்தில்

# இறுதிக்கிரியை நடக்கவில்லை

## விளக்குகிறார் மருத்துவர்

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்ப்பாணத்தில் உள்ள மருந்தகத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்றதாகவும், மருந்துகள் சரியான களஞ்சியப்படுத்தலின்றி இடம் மாற்றப்பட்டதாகவும், இறுதிக்கிரியை நடைபெற்ற தினத்தில் வியாபாரம் இடம்பெற்றதாகவும் கடந்த சில தினங்களாக ஊடகங்களில் வெளியான செய்திகளை மறுத்துள்ள மருந்தக உரிமையாளரின் கணவரான மருத்துவர் அது தொடர்பான தெளிவுபடுத்தல்களை வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் மருத்துவர் யோகானந் மேலும் தெரிவித்ததாவது,

வீடு மற்றும் மருந்தகம் என்பன தனித்தனியாக அமைந்துள்ளன. இரண்டுக்கும் வேறு வேறான ஆதன இலக்கங்கள் உள்ளன. அமைவுச் சான்றிதழ்களும் வேறு வேறாக உள்ளன. இரண்டுக்கான வாயில்களும் வேறுவேறாக உள்ளன.

அண்மையில் எனது உறவினர் ஒருவர் உயிரிழந்திருந்தார். இந்நிலையில் இரண்டு நாள்கள் அவரது பூதவுடலானது மருந்தகத்தில் வைக்கப்பட்டிருந்ததாக பொய்யான தகவல்கள் பரப்பப்பட்டிருந்தன. மரணச்சடங்கு நடைபெற்றது எனது மாமியாரின் வீட்டில். அந்த வீடானது மருந்தகத்துக்குப் பின்னால் வேறாக அமைந்துள்ளது. அடுத்ததாக மருந்துகள் இடம்மாற்றப்பட்டதாகக் கூறப்பட்டது. மருந்தகம் பூட்டப்பட்டிருந்ததனால் மருந்துகள் எவையும் விநியோகிக்கப்படவில்லை. இதனை எமது மருந்தகத்துக்கு வந்த உணவுப் பரிசோதகர்களும் உறுதிப்படுத்தி இருந்தார்கள். மரணச் சடங்கு நடைபெற்ற வேளையிலே மருந்து விற்பனை இடம்பெற்று இருந்ததாக காட்டுவதற்காகத் திட்டமிட்ட நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டது. நான் மயானத்துக்குச் சென்று தகனக் கிரியைகளை முடித்துவிட்டு வந்து மருந்தகத்துக்கு வெளியே இருந்தேன். அந்த வேளையில் ஒருவர் வந்து கண்ணுக்கு விடக்கூடிய மருந்து போத்தலைக் காட்டி "இந்த மருந்து உங்களது மருந்தகத்தில் மாத்திரம் இருந்ததனால் உங்களிடமே வாங்கினேன். தற்போது அவசர தேவையாக உள்ளதால் இந்த மருந்தை வாங்க வேண்டி உள்ளது. எங்கே வாங்கலாம்" எனக் கேட்டிருந்தார். அதற்கு நான் "இது குறித்து எனக்குத் தெரியாது. எனது மனைவியிடம் கேளுங்கள். அவர் இதனை எங்கு வாங்கலாம் எனக் கூறுவார்" என்று நான் அவருக்குக் கூறினேன்.

அவர் மனைவியிடம் சென்று மருந்துக் குப்பியை வழங்கி இதனை எங்கே வாங்கலாம் என வினவியுள்ளார். மருந்துக் குப்பியை வாங்கிப் பார்த்த எனது மனைவி, இது எம்மிடம் இல்லை, அருகில் உள்ள மருந்தகத்திலோ அல்லது யாழ்ப்பாண நகரத்தில் உள்ள மருந்தகங்களிலோ வாங்கலாம் எனக் கூறி அவரை அனுப்பி வைத்தார். அவர் சூட்சுமமான முறையில் கமராவை வைத்து அதனைப் படம்பிடித்து நாங்கள் மருந்து விற்பனை செய்ததாக காட்ட முற்பட்டுள்ளார். சுகாதாரத் துறையினருக்கு எதிராக எனது மனைவியால் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் அந்த வழக்கு நடைபெற்று வருகிறது. அந்த வழக்கு நெருங்கி வருகின்ற நிலையிலேயே இவ்வாறான பழிவாங்கல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. கடந்த தீபாவளி தினம் ஒன்றிலும் திட்டமிட்டு எமது மருந்தகம் மீது இவ்வாறான ஒரு பழிவாங்கல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மக்கள் இதுகுறித்து தெளிவாக இருக்கவேண்டும் - என்றார். (ஒ-27)

# பலமுனைப் போட்டியில் ஜனாதிபதித் தேர்தல்!

## பரபரக்கும் அரசியல்களம்

**கொழும்பு, ஜூலை 27**

**ஜனாதிபதித் தேர்தலுக்காக கட்சிகள் பலவும் தீவிரமாகச் செயற்பட்டு வரும் நிலையில் வேட்பாளர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளது என அரசியல் களத்தகவல்கள் தெரிவிக்கின்றன.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் விஜயதாஸராஜபக்ச, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, தொழிலதிபர் திலித் ஜயவீர, தொழிலதிபர் தம்மிக்க பெரேரா, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜானக ரத்நாயக்க, முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க மற்றும் வலஹங்குனவேவே மிஹிந்தலை ரஜமஹா விகாரை தம்மரதன தேரர் ஆகியோர் போட்டியிடவுள்ளனர். இது தவிர வடக்கிலுள்ள தமிழ்க் கட்சிகளின் பொது வேட்பாளரையும், மக்கள் போராட்ட இயக்கத்தின் வேட்பாளரையும் முன்னிறுத்த தீர்மானித்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, இம்முறையே ஜனாதிபதித் தேர்தலுக்கான மிகப்பெரிய வேட்பாளர் பட்டியல் முன்வைக்கப்படுகிறது என அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். (ச-இ)



# திங்களன்று இறுதி முடிவு

## பெரமுன அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 27

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான உறுதியான இறுதியான நிலைப்பாடு எதிர்வரும் திங்கட்கிழமை அறிவிக்கப்படும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி தெரிவித்துள்ளது.

இதனை அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் உறுதிப்படுத்தியுள்ளார். மொட்டுக் கட்சியின் விசேட அரசியல் குழு மற்றும் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் நடைபெற்று தீர்மானம் எடுக்கப்பட்டு, அந்த முடிவு திங்கட்கிழமை அறிவிக்கப்படவுள்ளது. (ச-44)

# குடியகல்வுத் திணைக்களம் வவுனியாவில் இடமாற்றம்

வவுனியா, ஜூலை 27

வவுனியா வெளிச்சுற்று வீதியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி முதல் காமினி மகா வித்தியாலயத்துக்கு முன்னால் 'மன்னார் வீதி, வவுனியா' எனும் முகவரியில் அமைந்துள்ள கட்டத்தில் நிறுவப்படவுள்ளது என குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தற்போது வெளிச்சுற்று வீதி, வவுனியா எனும் முகவரியில் அமைந்துள்ள பொதுமக்களுக்குச் சேவைகளை வழங்கிவரும் பிராந்திய அலுவலகத்தின் உத்தியோகபூர்வ கடமைகள் ஒகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் நிறைவடையும். ஒகஸ்ட் 3 ஆம் திகதி முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரையில் இந்த திணைக்களத்தின் பொதுமக்கள் சேவைகள் இடம்பெற மாட்டாது. மீண்டும் ஒகஸ்ட் 16 ஆம் திகதியே புதிய இடத்தில் பொதுமக்கள் சேவைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-22-18)

# துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி



கொழும்பு, ஜூலை 27

கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டில் மேலும் ஒருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-இ)

# வவுனியா இரட்டைக் கொலை குற்றவாளிகளின் மறியல் நீடிப்பு

வவுனியா, ஜூலை 27

வவுனியாவில் இடம்பெற்ற இரட்டைக் கொலைக் குற்றச்சாட்டு சந்தேகநபர்களின் விளக்கமறியலை நீடித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் கட்டளை பிறப்பித்துள்ளார்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த வருடம் ஜூலை மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவர் உயிரிழந்தனர்.

சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் ஏழு பேர் கைது செய்யப்பட்டனர். கடந்த ஒரு வருடமாக வழக்கு இடம்பெற்று வருவதுடன் சந்தேகநபர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் விளக்கமறியல் நீடிப்பு தொடர்பில் மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு நேற்றுமுன்தினம் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேகநபர்களுக்கு எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி வரை விளக்கமறியல் நீடித்து கட்டளை வழங்கியதுடன், 7 ஆவது சந்தேகநபரான பிரதான சந்தேகநபருக்கு எதிர்வரும் பெப்ரவரி 25 வரை விளக்கமறியலை நீடித்து கட்டளை பிறப்பித்தது. (ச-18)

# உடுப்பிட்டி மதுபானசாலை எதிராளிக்கு பிடியாணை

வவுனியா, ஜூலை 27

பிரதேச மக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி உடுப்பிட்டி இமையாணன் மேற்குப் பிரதேசத்தில் திறக்கப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய மதுபானசாலை தொடர்பாக செய்யப்பட்ட வழக்கில் எதிராளிக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த மதுபானசாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேசசபை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு கடந்த புதன்கிழமை மீளவும் தீர்ப்புக்காக எடுக்கப்பட்டது. இதன்போது எதிராளி சமுகமளிக்காத காரணத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டதுடன் அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை வழக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஓ' குருதிவகைக்கு பெரும் தட்டுப்பாடு

பருத்தித்துறை, ஜூலை 27

**பருத்தித்துறை ஆதார மருத்துவமனை குருதி வங்கியில் 'ஓ பொசிட்டிவ்' வகை குருதிக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**



பருத்தித்துறை ஆதார மருத்துவமனை குருதி வங்கியில் தொடர்ந்து சகல வகையான குருதி வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவி வருவதாக மருத்துவமனை தரப்பில் கடந்த வாரம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், 'ஓ பொசிட்டிவ்' வகை குருதிக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் குறித்த வகை குருதியுடைய தன்னார்வ கொடையாளர்கள் குருதி கொடை வழங்குமாறும் பருத்தித்துறை மருத்துவமனை தரப்பினர் அவசர கோரிக்கை விடுத்துள்ளனர். அண்மைக்காலமாக தன்னார்வ குருதி கொடை நிகழ்வுகள் குறைவடைந்து வருகின்றமை காரணமாக தேவையான குருதி கையிருப்பை பேணுவதில் நெருக்கடி நிலவிவருவதாகவும்- இவ்வாறு குருதி தட்டுப்பாட்டு நிலை நீடிப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வடமராட்சி பிரதேசத்தில் உள்ள தன்னார்வ குருதி கொடையாளர்கள் பருத்தித்துறை ஆதார மருத்துவமனை குருதி வங்கிக்கு நேரடியாக வருகைதந்து குருதிக்கொடை செய்ய முடியும் எனவும், குருதிகொடை நிகழ்வுகளை ஏற்பாடு செய்யும் இயலுமை உள்ளவர்கள் 0213154300 என்ற இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனை குருதி வங்கி தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-100)

# வேண்டப்பட்டோருக்கு அதிக நிதி ஒதுக்கீடு!

*ரணிலைச் சாடும் சுமந்திரன்*

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனக்கு வேண்டப்பட்டவர்களுக்கு அதிக நிதி ஒதுக்கியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி செயலகத்தால் சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டது. பன்முகப்படுத்தப்பட்ட நிதியே ஒதுக்கப்படுவதாக எங்களுக்குச் சொல்லப்பட்டது. ஆனால், எங்களுக்கு அந்த நிதி ஒதுக்கப்படாமை தொடர்பில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவில் நானும், கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கேள்வி எழுப்பினோம். இதனையடுத்து யாழ். மாவட்டச் செயலகத்திலிருந்து கடிதம் அனுப்பப்பட்டது. வழமையான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு தான். அதற்கு எம்மையும் திட்டங்களை அனுப்புமாறு கோரப்பட்டிருந்தது. திட்டங்களை அனுப்பிய பின்னர் இழுத்தடித்து தற்போது அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. இதேவேளை- ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பவர்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது - என்றார். (ஒ-20)

## நிரந்தர 'லைசென்ஸ்' இரு மாதங்களுக்குள்

தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட அனைவருக்கும் எதிர்வரும் செப்ரெம்பர் அல்லது ஒக்ரோபர் மாதங்களுக்குள் நிரந்தர சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் என்று மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார். 2020 ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார பிரச்சினையால், சாரதி உரிம அட்டைகளுக்கு தேவையான அட்டைகளை பெறுவதில் சிக்கல் ஏற்பட்டது. தற்போது தேவையான அட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. என்றும் அவர் தெரிவித்திருந்தார். (ச-இ)

## ஜனாதிபதி செயலக நியமனம் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்க ஜனாதிபதி செயலகம் வழங்கிய நியமனங்கள் உயர்நீதிமன்றால் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் உறுப்பினர்களுடன், முன்னாள் தவிசாளர்களையும் வைத்து ஒவ்வொரு உள்ளூராட்சி எல்லைக்குள்ளும் குழுக்களை அமைத்து, அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்க ஜனாதிபதி செயலகம் நியமனங்களை வழங்கியது. அந்த நியமனங்களும் உயர் நீதிமன்றால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது - என்றார். (ஒ-125)

# சொகுசுப் பேருந்து புத்தளத்தில் விபத்து;

மன்னார், ஜூலை 27

கொழும்பிலிருந்து மன்னார் நோக்கிப் பயணித்த தனியார் சொகுசு பேருந்து ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை புத்தளம் காக்காபள்ளிய பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது. குறித்த பாதையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளது. விபத்தில் பேருந்தில் பயணித்தவர்களுக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் பேருந்து பகுதியளவில் சேதமடைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-213)

# அபிவிருத்தித் திட்டங்கள் தெளிவுபடுத்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 27

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் தெளிவுப்படுத்தும் ஊடக மாநாடு வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் இன்று நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாநாட்டில் வட மாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவன் கலந்து கொண்டார்.

கண்ணிவெடி அகற்றல், மீள்குடியேற்ற செயற்பாட்டின் முன்னேற்றம், சிவில் பிரஜைகளின் காணி விடுவிப்பு, சூரிய மின்படல வீட்டுத்திட்டம், குடிநீர் விநியோக திட்டம், சுற்றுலாத்துறை அபிவிருத்தி திட்டங்கள், 'உரித்து' செயற்றிட்டம், கல்வித்துறை, விவசாயம் ,நீர்பாசன திட்டங்கள், சுகாதாரத்துறை, முதலீட்டு ஊக்குவிப்பு வேலைத்திட்டங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டன. (ச-25,27,26)

## புதினம் தெரியுமோ?

**வே**லியே பயிரை மேயிறதெல்லாம் இப்ப சர்வசாதாரணம். அதாலதான் உந்தக் கள்ளர் காடரெல்லாம் வலுதுணிவா தாங்கள் நினைச்சதை நடத்திக்கொண்டிருக்கினம். முந்தநாள் மானிப்பாய் ' கட்டுடையில நடந்த அக்சிடெண்டிலையும் இப்பிடி குற்றம் செய்தவரை காப்பாத்த காக்கிக்காரர் வெளிக்கிட்டவை. 'ஹைஎஸ்' ஒண்டு எதிரில மோட்டர் சைக்கிளில பிள்ளையோட வந்த பொம்பிளையோட மோதுண்டு, அந்தப் பொம்பிளை அந்த இடத்திலேயே செத்திட்டா. அந்தக் குழந்தை அடிபட்ட வேகத்தில தூரப்போய் விழுந்தாலும், உயிருக்கு ஆபத்தில்லாமல் தப்பிட்டுது. இப்பிடி மோட்டர் சைக்கிளில மோதின ஹைஎஸ் வாகனத்தை ஓடிக்கொண்டு வந்தவர் கடும் மப்பில இருந்தவர் எண்டு சனங்கள் சொல்லுகினம். 'அந்த வாகனத்தை உவங்கள் எப்பவும் குடிச்சுப்போட்டுத்தான் ஓடுறவங்கள்' எண்டு ஊர்ச்சனங்களும் சத்தியம் செய்யாத குறையாச் சொல்லுகினம்.

அக்சிடெண்ட் நடந்த கொஞ்சநேரத்திலயே அதை ஓடிக்கொண்டு வந்தவர் நைஸா மாறிட்டார். அந்த ஹைஎஸூக்குள்ள நடக்கமுடியாத மப்பில இன்னும் ரண்டு பேர் இருந்தவை. அவைக்கு வாகனத்தை ஓடிக்கொண்டு வந்தவர் கம்பி நீட்டிட்டார் எண்டதே தெரியாமல், மட்டையாகிக் கிடந்திருக்கினம். அந்தநேரம் பார்த்து அங்க வந்த பொலிஸ்காரர், றைவரைத் தேடிப் பிடிக்கிறதை விட்டிட்டு, வாகனத்துக்குள்ள மட்டையாகிக் கிடந்தவையைப் பிடிச்சு கையுக்கு விலங்கு போட்டு, தங்கட வாகனத்துக்க ஏத்திட்டினம். அவையின்ர பிழை அந்த வாகனத்தில குடிச்சுப்போட்டு பின்னுக்கு இருந்து வந்ததுதான். ஆனால், அவைதான் வாகனத்தை ஓடிவந்து, அந்தப் பொம்பளையை அடிச்சுச் சாக்காட்டின மாதிரித்தான் பொலிஸ்காரர் அவையோட நடந்துகொண்டவை.

எப்ப பார்த்தாலும் குடிச்சுப்போட்டு உந்த ஹைஏஸை எடுத்துக்கொண்டு, பேய்வேகத்தில ஊரைச் சுத்தித்திரியிறதுதான் உவையின்ர பொழுதுபோக்கு. இண்டைக்கு ஆக்களுக்கு நல்லா ஏறிட்டுது போல, அதுதான் கண்மண் தெரியாத வேகத்தில வந்து அந்தப் பொம்பிளையை அடிச்சுச் சாக்காட்டிப் போட்டாங்கள். அவங்கள் பொலிஸூக்கு அடிக்கடி தண்ணி, வெந்நி வாங்கிக் குடுக்கிறவங்கள். அதால அவங்களோட பொலிஸூம் கடும் சப்போர்ட் எண்டு அங்கத்தைச் சனங்கள் பப்ளிக்காவே சொன்னவை. அதை உண்மையாக்கிற மாதிரித்தான் பொலிஸ்காரரும் நடந்தவை. வாகனத்தை ஓடிக்கொண்டு வந்தவரை தப்ப விட்டிட்டு, பின்னுக்கு கிடந்தவைதான் அதை ஓடிக்கொண்டு வந்தவை எண்டமாதிரித்தான் கதையை மாத்த வெளிக்கிட்டவை. ஆனால் அந்த அக்சிடெண்டை நேரில பாத்த சனங்கள் உசாரா இருந்து, பொலிஸ்காரரை கேள்வி கேட்டபடியாலதான் 'உண்மையான குற்றவாளியைப் பிடிக்கிறம்' எண்டு இறங்கி வந்தவையாம். இல்லாட்டி தாங்கள் நினைச்சமாதிரி கேஸை முடிச்சுப்போட்டு, 'வாங்கவேண்டியதை' வாங்கியிருப்பினம். இப்பிடியானவைதான் சட்டத்தையும் சனத்தையும் காக்கிற காவலர்களாம். இந்த அக்சிடெண்ட்டுக்குப் பிறகு நடந்த இன்னொரு விசயத்தையும் சொல்லத்தான் வாய் துடிக்குது. ஆனால் இப்ப அதுக்கு நேரமில்லை. திங்கட்கிழமை அதைப்பற்றிக் கதைப்பமோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உதயன் ஊடக அனுசரணையுடன், அராலி களவத்துறை விளையாட்டுக் கழகத்தின் 77 ஆவது ஆடிப்பிறப்புவிழா, களவத்துறை மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதன்போது பாரம்பரிய விளையாட்டுகள் இடம்பெற்றன. தொடர்ந்து, ஆடிப்பிறப்பு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட மென்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் பிரதம விருந்தினராக உதயன் குழுமத்தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-125)

# பொன் விழா

கிளிநொச்சி, ஜூலை 27

கிளி. திருவையாறு மகா வித்தியாலயத்தின் பொன் விழா நேற்று முதல் ஆரம்பமாகி இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது. விழா நாள்களில் நடைபவனி, மர நடுகை, விளையாட்டுகள், விஞ்ஞான ஆய்வுகூட திறப்பு விழா, பரிசளிப்பு விழா, மலர் வெளியீடு, கௌரவிப்பு என்பன நடைபெறவுள்ளன. (ச-25, 13)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தின் அம்பாள் மஹோற்சவம், எதிர்வரும் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

ஓகஸ்ட் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும், மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறவுள்ளதுடன் மறுநாள் வியாழக்கிழமை திருவூஞ்சலும் நடைபெற்று மஹோற்சவம் நிறைவுபெறுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ப)

# முன்னாயத்தக் கலந்துரையாடல்

பளை, ஜூலை 27

பளை இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோவில் பெருந்திருவிழா தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல், கோவில் மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறுமெனவும் தேர்த்திருவிழா ஓகஸ்ட் 18 ஆம் திகதியும், மறுநாள் 19 ஆம் திகதி சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும், 20 ஆம் திகதி கேணித்தீர்த்தமும் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ப-9)

# நினைவேந்தலும் பொதுக்கூட்டமும்

யாழ்ப்பாணம், ஜூலை 27

1983 ஆம் ஆண்டு ஜூலைக் கலவரத்தை நினைவுகூர்ந்து, கறுப்பு ஜூலை நினைவேந்தலும் பொதுக் கூட்டமும் தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது. (ப-66)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ். முகாமையாளர் நிறுவகம் 'குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் முனைவோருக்கான வளர்ச்சி தொடர்பில் நுண் நிதி வழங்கல்' என்ற தொனிப்பொருளிலான கருத்தரங்கு ஒன்றை, அரியாலை புங்கன்குளம் வீதியில் அமைந்துள்ள 'J' ஹோட்டலின் 3 ஆம் மாடியிலுள்ள யுகன் மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் 11.30 மணி வரை நடத்தவுள்ளது.

கருத்தரங்கில், இலங்கைவங்கியின் "வணிக மீள் எழுச்சியும் மறுவாழ்வும்" என்ற பணிக்குப் பொறுப்பான துணைப் பொது முகாமையாளர் எஸ்.சிவன்ஜன் கலந்து கொள்ளவுள்ளார். (ப)

# புத்தக அரங்க விழா 2 ஆம் நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 27

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப்பொருளில் சங்கானையில் முன்னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் 2 ஆம் நாள் மாலை நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு மக்கள் கவிஞர் சுபத்திரன் நினைவு அரங்கில் ஓய்வுநிலை அதிபரும், சமூக செயற்பாட்டாளருமான எஸ்.ஜெகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ப)

# விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 27

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சும் கோப்பாய்ப் பிரதேச செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த, பாதுகாப்பான தொழிலாளர் புலம்பெயர்வும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் சேவைகள் தொடர்பான தெளிவூட்டலும், கோப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளன. (ப-66)

# திருமுறை பெருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 27

இந்து சமயப் பேரவையின் திருமுறைப் பெருவிழா 9 ஆம் திருமுறை வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் 7 மணிவரை இந்து சமயப் பேரவைத் தலைவர் ஈசான சிவசக்திகிரீவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

முதற்பிரதியை உதயன் பத்திரிகை முகாமைத்துவப் பணிப்பாளர் ஈஸ்வரபாதம் சரவணபவன் பெற்றுக்கொள்ளவுள்ளார். (த-இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் இழுபறியாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. பண உதவி கிடைக்க வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். இளைய சகோதரர்கள் மூலம் சில சங்க டங்கள் ஏற்பட்டு நீங்கும். நினைத்த காரியங்கள் வெற்றிகரமாக நிறைவேறும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மனதில் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான எந்த வியமாக இருந்தாலும் குடும்பப் பெரியவரின் அறிவுரையைக் கேட்டு நடப்பது நல்லது. இன்று துர்கையை வழிபடுவது நன்று.

**கடகம்:** உற்சாகமாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். நினைத்த காரியத்தை நினைத்தபடி முடிப்பீர்கள். ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். பணம் இருப்பதால் செலவுகளை சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது.

**சிம்மம்:** அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். காரியங்களில் பொறுமை மிக அவசி யம். அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்பு கரையும். சிலருக்குக் கடன் வாங்கக்கூடிய சூழ்நிலையும் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவு பிறக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது. உறவினர்களால் ஆதாயம் கிடைக்கும்.

**துலாம்:** ஆதாயம் கிடைக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சு சாதகமாக முடியும். புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். மன இறுக்கம் நீங்கி நிம்மதி உண்டாகும்.

**விருச்சிகம்:** பதற்றம் இல்லாமல் செயற்படவேண்டிய நாள். வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்க வும். உறவினர்கள் மூலம் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** புதிய முயற்சிகளைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். சற்று சோர்வு உண்டாகும். கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும். ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. குடும்பத்தில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**மகரம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பிள்ளைகள் உங்கள் விருப்பப்படி நடந்து கொள்வார்கள். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சகோதரர்கள் மூலம் ஆதாயம் உண் டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். முயற்சிகள் சாதகமாகும். கடனாகக் கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும்.

**மீனம்:** ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். மனதுக்கு உற்சாகம் தரும். புதிய முயற்சிகளில் யோசித்து ஈடுபடுவது நல்லது. வீண் செலவுகள் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழ்த் தேசியத்தின் பெருமதிப்புக்குரியவர்!

இலங்கையில் இடதுசாரிகளுக்கு எல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்தவரும், தமிழர்களே இலங்கையின் தொன்மைக் குடிகள் என்று தெற்கில் அச்சமின்றி திரும்பத் திரும்ப உரைத்துக் கொண்டிருந்தவருமான கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன நேற்று முன்தினம் காலமாகியுள்ளார். கருணாரட்னவின் மறைவு என்பது தனியே தென்னிலங்கை சிங்கள அரசியல் தலைவர் ஒருவருடையதோ இடதுசாரித் தலைவர் ஒருவருடையதோ மறைவு அல்ல. மாறாக 'தமிழ்த் தேசியத்தின்' பேரிழப்பு.


சிங்கள அரசியல் சித்தாந்தங்களால் நிரம்பப் பெற்றுள்ள இலங்கையின் அரசியலில், கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன 'சேற்றுக் குளத்தில் மலர்ந்த செந்தாமரை' 50 வருடகால அரசியல் அனுபவம்கொண்ட அவர், இலங்கையின் பல்வேறு இனப்பிரச்சினைகள் மற்றும் போராட்டங்களின் போது சிங்கள -பௌத்த சித்தாந்தத்தின் போக்குகளை வன்மையாகக் கண்டித்தவர். 1962ஆம் ஆண்டு அக்காலத்தில் இடதுசாரிக் கொள்கையைக் கொண்டிருந்த சமசமாஜக் கட்சியில் இணைந்து அரசியலுக்குள் கால்பதித்த கருணாரட்ன, தனது சுய கொள்கையில் என்றும் விடாப்பற்றுடன் இருந்தார்.

1972ஆம் ஆண்டு, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்கு சமசமாஜக் கட்சி வழங்கிய ஆதரவையடுத்தும், அரசமைப்பு மறுசீரமைப்பை அவர் சார்ந்த கட்சி ஏற்றுக்கொண்டதையடுத்தும் 'சுயகொள்கைக்கு' முதலிடம் கொடுத்து, கட்சியில் இருந்து வெளியேறி நவசமசமாஜக் கட்சி என்பதைத் தோற்றுவித்தார். அன்றுமுதல் அவர் இறக்கும் இறுதிநாள் வரையில், சிங்களப் பேரினவாதம் எத்தனையோ பேரம்பேசல்களையும், மிரட்டல்களையும் விடுத்தபோதிலும், தமிழர்களின் சுயாட்சியையும், இலங்கைத் தீவின் பூர்வக் குடிகள் தமிழர்கள் என்பதையும் அவர் ஓயாது வலியுறுத்தி வந்தார்.

ரூபாவாலும், டொலராலும் தீர்மானிக்கப்படமுடியாததாகத்தான் கருணாரட்னவின் கொள்கைகள் அமைந்திருந்தன. அதனால்தான் அவரால் இன்றைய அரசியல் தலைவர்களைப்போன்ற பகட்டான வாழ்க்கையை வாழ முடியவில்லை. அவருடைய கட்சியும்சரி, அவருடைய அரசியல் வாழ்வும்சரி நலிந்தே காணப்பட்டன. அக்கினியுடன் சங்கமமாகும் வரையிலும் அவருடைய கொள்கைப் பிடிப்பில் கருணாரட்ன கம்பீரமாகவே இருந்தார். அதில் அவர் வெற்றியும் கண்டார். ஆனால், கருணாரட்னவின் விடயத்தில் பெரும்தோல்வி ஏற்பட்டது தமிழ்த் தேசியத்துக்குத்தான்.

2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனித்த மறுவருடமே (2010) இலங்கைத்தீவு ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை எதிர்கொண்டது. அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, பொதுவேட்பாளரான பொன்சேகா இவர்களுடன், தமிழர்களின் விடிவுக்காகப் போராடிக்கொண்டிருந்த விக்ரமபாகு கருணாரட்னவும் தேர்தலில் களமிறங்கினார். தமிழர் தாயகத்தின் வாக்குகள் பொன்சேகாவுக்கு அள்ளி வழங்கப்பட்டன. கருணாரட்னவால் வெறும் 7 ஆயிரத்து 55 வாக்குகளையே பெறமுடிந்தது. இன்று பொதுவேட்பாளர் என்று சிந்திக்கும் தமிழ்த் தேசியத் தலைமைகள் அன்று இடதுசாரித் தலைவர் என்ற முடிவை எடுத்திருந்தால் கருணாரட்னவுக்கான கௌரவம் என்றோ வழங்கப்பட்டிருக்கும். ஆனால், வெள்ளம் வீட்டை மேவிய பின்னர் அணைகட்டும் எங்களின் 'அரசியல் முதிர்ச்சியாளர்களுக்கு' அன்று ஓர் இடதுசாரித் தலைமையின் தேவை உணரப்படாமை ஆச்சரியத்திலும் ஆச்சரியமே. 'இறுதிப் போரில் இராணுவத்தினர் போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லை. தமிழர்கள் தங்களின் வாக்குகளை எனக்கு அள்ளி வழங்கியமையே இதற்குச் சாட்சியம்' என்று, பொன்சேகாவால் இன்று புளுகித்தள்ள முடிகின்றது என்றால், அது தமிழ்த் தேசியத் தலைவர்களுடைய தவறின் பிரதிபலிப்பே. இதில் பொன்சேகாவை நொந்துகொள்ள ஏதுமில்லை.

தமிழர்களின் அரசியல் போராட்டமும் அதன் வரலாறும் வழிநெடுகிலும் துரோகங்களாலும், தவறுகளாலும் நெய்யப்பட்ட ஒன்றே. தமிழ்த் தேசியத்தின் பெருமதிப்புக்குரிய 'மாமனிதர்' கலாநிதி விக்ரமபாகு கருணாரட்னவை தமிழர் தாயகமும் தமிழ்த் தேசியமும் கொண்டாட மறந்த கதையும் அத்தகையதுதான்...!



# தேர்தல் உத்தரவுகளை உரியமுறையில் பேணுக

## தேர்தல்கள் ஆணைக்குழு ஆணித்தரம்

**கொழும்பு, ஜூலை 27**

**தேர்தல் ஆணைக்குழுவால் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளை குறித்த நிறுவனங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு கோரியுள்ளது.**

இதுதொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ. எல். ரத்நாயக்க தெரிவிக்கையில்;

தேர்தல் ஆணைக்குழுவினால் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளை குறித்த நிறுவனங்கள் உரியமுறையில் நடைமுறைப்படுத்தவேண்டும். சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கு அனைத்து வேட்பாளர்களும் உத்தரவுகளைப் பின்பற்றவேண்டும்.

தேர்தல் குறித்த கண்காணிப்புகள் இறுக்கமாக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# ஊழல் ஒழிப்பு வேலைத்திட்டம்

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு , ஜூலை 27

ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட தேசிய ஊழல் ஒழிப்பு வேலைத் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

2025 - 29 வரையான காலப்பகுதியில் ஊழல் ஒழிப்புச் சட்டங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துவது பற்றி இந்தத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரங்களை அதிகரித்தல், கணக்காய்வாளர் நாயகத்தின் அதிகாரங்களை அதிகரித்தல், வரி விலக்கு பெறும் நிறுவனங்கள், வரிவிலக்கு பெறும் அரச நிறுவனங்கள் போன்ற விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ச-22-6)



# தொடர் மறியலில் கெஹலிய

கொழும்பு, ஜூலை 27

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உட்பட 6 பேரை ஓகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட 6 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# ரூ. 232 மில்லியன் அதிக ஒதுக்கீடு

கொழும்பு, ஜூலை 27

மத்திய வங்கிப் பணியாளர்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள சம்பளம் காரணமாக 232 மில்லியன் ரூபா மேலதிகமாக ஒதுக்கப்படவேண்டியுள்ளது என ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். இந்தச் சம்பள அதிகரிப்பு நாடாளுமன்றத்தின் பரிந்துரைக்கு அமைவாகவே முன்னெடுக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ஒ-6)

# கட்டார் அரசால் இலவச உரம்

கொழும்பு , ஜூலை27

குருநாகல்,மாத்தளை, மொனராகலை மாவட்ட விவசாயிகளுக்கு இலவசமாக உரம் வழங்குவதற்கு கட்டார் முன்வந்துள்ளது. 3 ஆயிரத்து746 விவசாயக் குடும்பங்கள் இதன்மூலம் பயன் பெறவுள்ளன. ஒவ்வொரு குடும்பத்துக்கும் 25 கிலோ உரம் இலவசமாக வழங்கப்படவுள்ளது. (ச-22-6)

## நாளை

28.07.2024

ஞாயிற்றுக்கிழமை - ஆடி - 12

சுபநேரம் : 09.02 - 10.32

ராகுகாலம் : 04.32 - 06.02

## நாளொரு நல்வார்த்தை


**மனிதனின் குற்றங்களில் பெரும்பாலானவை அவனது நாவிலிருந்துதான் பிறக்கின்றன.**

- *நபிகள் நாயகம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்கள், மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டம் மற்றும் மல்யுத்த விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி சாதனை படைத்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு வித்தியாலய பிரதான மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ப-13)




'தேசமே பயப்படாதே' எனத் தெரிவித்து, யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தற்போது பரவலாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

பெரிய அச்சு எழுத்துகளுடன் கூடியதாகக் குறித்த சுவரொட்டிகள் காணப்படும் நிலையில், சுவரொட்டிகள் யாரால்? எதற்காக? ஒட்டப்பட்டுள்ளன என்பது தெரியவரவில்லை. (ப-66)





## அங்குரார்ப்பண நிகழ்வு!

இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகப் பிராந்திய நிலையம், யாழ்.மாவட்டச் செயலகம் இணைந்து நடத்தும் முன் கற்றலுக்கான அங்கீகார முறைமை ஊடாக கடலக மாலுமிகளுக்கான தேசிய தொழிற் தகைமைச் சான்றிதழ் வழங்குவதற்கான திறன் இடைவெளி நிரப்புதல் நிகழ்ச்சித் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு யாழ்.மாவட்டச் செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

தெல்லிப்பழை, வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய நான்கு பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய 42 பயனாளிகளுக்கான பயிற்சித் திட்டத்தை யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் ஆரம்பித்து வைத்தார். (ஒ-22-66)



## நூல்கள் கையளிப்பு

மன்னார், ஜூலை 27

மன்னார் ஊடகவியலாளர் எஸ்.ஜெகனால் சங்க இலக்கிய நூல்கள் மற்றும் இடம்பெயர் ஆய்வுகள் மூலம் எழுதி அண்மையில் வெளியீடு செய்யப்பட்ட 'மகாவம்ச விஜயனும் மன்னார் கட்டுக்கரை பிரதேசமும்' என்னும் வரலாற்று ஆய்வு நூலின் ஒரு தொகுதியை, மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் சிரேஷ்ட பிரஜைகளின் நலன்சார்ந்து செயற்பட்டு வரும் 'மெதோடிஸ் சர்ச் டெவ்லிங்' நிறுவனம், பெற்றுக்கொண்டது. (ப-213)



## தமிழ்த்தினப் போட்டி

கிளிநொச்சி கரைச்சிகோட்ட தமிழ்த் தினப் போட்டியில் கிளிநொச்சி மத்திய கல்லூரி வெற்றிகளைக் குவித்துள்ளது. கர்நாடக சங்கீதம் தனி இசைப் பிரிவு - 2 இல் கனிமொழி 2ஆம் இடத்தையும், பிரிவு - 3 இல் சங்கீர்த்தனா 1 ஆம் இடத்தையும், பிரிவு -5 இல் அபிவர்ணசர்மா 1 ஆம் இடத்தையும், நாட்டார் இசையில் இசை குழு -1, இசை குழு -2 முதலாம் இடத்தையும், பிரிவு -2 பரதநாட்டிய தனி நடனம் 3 ஆம் இடத்தையும் பிரிவு -3 இல் 1 ஆம் இடத்தையும், குழு நடனத்தில் 2 ஆம் இடத்தையும், நாட்டிய நாடகத்தில் 1 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர். (ஒ-25-13)

உளநல மருத்துவ நிபுணர் எஸ்.சிவதாஸ் எழுதிய 'பொறுப்பான பிள்ளை வளர்ப்பு' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வும் அரும்புகள் அமைப்பின் இணையத்தள அங்குரார்ப்பணமும் யாழ். மருத்துவச் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்.போதனா மருத்துவமனையின் தாதியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றன. (ப-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உப்புவயல் குளத்தில் காசி தீர்த்தம் கலப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 27

இந்தியாவின் காசி திருத்தலத்திலிருந்து கலாநிதி சிதம்பரமோகன் என்பவரால் எடுத்துவரப்பட்ட புனித தீர்த்தம் அண்மையில் வட்டுக்கோட்டை உப்புவயல் குளத்தில் பக்திபூர்வமாக கலக்கப்பட்டது. நிகழ்வில் சங்கானை பிரதேச செயலர் திருமதி கவிதா உதயகுமார், இந்து, பௌத்த மதகுருக்கள், சங்கானை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ப-27)

### உலர்வலயமான

# முல்லைத்தீவு மாவட்டத்தில் கறுவாச் செய்கை வெற்றி



யாழ்ப்பாணம், ஜுலை 27

**முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்றுமதி பயிரான கறுவா செய்கை வெற்றியளித்துள்ளது என்று ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தின் பண்ணை முகாமையாளர் லி.துமிலன் தெரிவித்துள்ளார்.**

உண்மையில் கறுவா இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டது. பொதுவாக இலங்கையின் மத்திய மலைநாட்டில் இது நன்கு வளரக்கூடியது. கண்டி, மாத்தளை, ஹப்புதலை போன்ற பகுதிகளிலும் சிங்கராஜ வனப் பகுதிகளிலும் கறுவா பயிரிடப்படுகிறது. இந்தநிலையில் முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சிநிலையத்தில் இந்தப் பயிர்ச்செய்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. கறுவாப் பயிர்ச்செய்கைக்கு ஈரவலயமே மிகவும் பொருத்தமானது என்பதனைத் தாண்டி இடைவலயத்திலும் உலர்வலயத்திலும் செய்கை பண்ண முடியும் என நிரூபிக்கப்பட்டுள்ளது. கறுவாச் செய்கை தொடர்பில் விவசாயிகள் மேலதிக தகவல்களை ஒட்டுசுட்டான் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-19)

## கருத்தமர்வு

இழந்த காணிகளை ஜனநாயக ரீதியில் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவூட்டும் விழிப்புணர்வு நிகழ்வு, முசலி கோட்டக் கல்விப் பணிமனையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன்போது காணி தொடர்பான ஆவணங்களை சரிபார்ப்பது, தகவல் சேகரிப்பது, ஆவணங்களைப் பெற்றுகொள்வதற்கு தகவல் அறியும் உரிமை சட்டத்தைப் பயன்படுத்துவது தொடர்பிலும் தெளிவூட்டப்பட்டன. (ப-56)

### மல்யுத்தப் போட்டி

## முல்லை கலைமகள் பதக்கங்கள் குவித்தது

முல்லைத்தீவு, ஜுலை 27

வடக்கு மாகாண மல்யுத்தப் போட்டியில் முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலய மாணவ, மாணவிகள் வெற்றியீட்டி பதக்கங்களைப் பெற்றுள்ளனர். ஆண்கள் பிரிவில் சாதுரியன், ஜெ.சதுர்சன், ச.றதிபன் ஆகியோர் தங்கப் பதக்கங்களையும், இ.ரிசோபன், ச.செம்பியன் ஆகியோர் வெள்ளிப் பதக்கங்களையும், உ.டிலைக்சன், வி.இலக்கியன் ஆகியோர் வெண்கலப் பதக்கங்களையும் பெண்கள் பிரிவில் புவியரசி, தசானா ஆகியோர் தங்கப் பதக்கங்களையும் பெற்றுள்ளனர். (ச-25-13)

## சிங்கள வேட்பாளரையே ஆதரிக்கவேண்டுமாம்

### தமிழர் மரபுரிமைக் கட்சி அறிக்கை

எமது அபிலாஷைகளை நிவர்த்திசெய்யும் நோக்கில், எமது கோரிக்கைகள் நிபந்தனைகளை ஏற்று உடன்படும் பெரும்பான்மை வாக்குப் பலமுள்ள ஒரு வேட்பாளருடன் இணக்கப்பாட்டை உருவாக்கிக் கொள்ளவேண்டும் - இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டத்தைத்தளமாகக் கொண்டு செயற்படும் தமிழர் மரபுரிமைக் கட்சி அறிக்கை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில்;

இம்முறை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக்கொண்டு ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை தேர்தலில் போட்டியிடவைப்பதற்கு பெரும்பாலான கட்சிகள் முனைப்புக் காட்டி வருகின்றன. இந்தச் செயற்பாடானது வெறுமனே ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் வாக்குகளை சிதறடிக்கச் செய்து, தாங்கள் ஆதரவளிக்கும் ஒரு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வேட்பாளரை வெற்றி பெறச் செய்வதாகும். இதனால் அடிப்படை மக்களுக்கு எவ்வித நன்மையோ - பலன்களோ -தீர்வுகளோ- முன்னேற்றமோ கிடைக்க எவ்விதமான நடைமுறைச் சாத்தியமும் இல்லை- என்றுள்ளது. (ஒ-19)

## சுமந்திரன் தமிழரசுக் கட்சியின் ஊடகப்பேச்சாளர் அல்லர்

### அரியநேந்திரன் விளாசல்

மட்டக்களப்பு, ஜுலை 27


ஊடகங்களில் வெளிவரும் செய்திகளில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் என விழித்து எழுவது பொருத்தமற்றது என்று தமிழரசுக் கட்சியின் முதன்மை உறுப்பினர்களில் ஒருவரும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான பா.அரியநேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை தமிழரசுக்கட்சி பேச்சாளர் என குறிப்பிட்டது தவறுதலான ஒரு விடயமாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சாளராகவே சுமந்திரன் நாடாளுமன்றக் குழுவால் நியமிக்கப்பட்டார். ஊடகங்களும் அவர்கள் விரும்பியபடி பதவிகளைக் குறிப்பிடுவது தமிழரசுக்கட்சி உபவிதிக்கு முரணானது.

தற்போது தமிழரசுக்கட்சி நீதிமன்றில் வழக்கு நடைபெறும் வேளையில் கட்சி உபவிதிகளைமீறி விரும்பியபடி பதவிகளைக் குறிப்பிடுவதும் தவறு. இதேவேளை - எந்தப் பெரும்பான்மை சிங்கள வேட்பாளரை ஆதரிப்பதாகவும் தமிழரசுக்கட்சி எந்த முடிவையும் இதுவரை எடுக்கவில்லை என்பதே தற்போதைய நிலைமையாகவுள்ளது என்று அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-இ)

போக்கட்டி அ.த.க. பாடசாலை மாணவர்களின் பெற்றோருக்கு, மாணவர்களின் வரவொழுங்கு மற்றும் சிறுவர்களுக்கு எதிரான சிறுவர் துஷ்பிரயோக செயற்பாடு, வீட்டு வன்முறை மற்றும் வீதி ஒழுங்கு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தூட்டல் நிகழ்வு, அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் கொடிகாமம் பொலிஸ் நிலைய உபபொறுப்பதிகாரி எஸ்.பிரபாகரன், கொடிகாமம் பொலிஸ் பிரிவின் போக்குவரத்துப் பொறுப்பதிகாரி த.தர்மரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-159)





ஓவியக் கண்காட்சி

கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரி முதல்வர் அ.பங்கயற்செல்வன் தலைமையில் ஓவியக் கண்காட்சி நிகழ்வு கல்லூரி வளாகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வடக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஹம்சத்தனி வினோதன், சிறப்பு விருந்தினராக கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆ.உதயணன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25-13)

## மக்களின் குரலாக ஒலித்தவர் விக்ரமபாகு

### லெனினிசக் கட்சி அஞ்சலி

இலங்கையின் தொழிலாளி வர்க்கத்துக்காகப் போராடி வந்த தோழர் விக்ரமபாகு, ஆளும் வர்க்கம் முன்னெடுத்துவந்த தேசிய இனங்களுக்கு எதிரான சிங்கள - பௌத்த பேரினவாத ஆட்சியினருக்கு எதிரான போராட்டத்தில் எப்பொழுதும் முன்னணியில் இருந்தவர் என புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தனது அஞ்சலியுரையில் தெரிவித்துள்ளது.

தேசிய இனப்பிரச்சினை காரணமாக இடம்பெற்றுவந்த கொடிய போரை உடன்நிறுத்தி, சுயநிர்ணய உரிமை அடிப்படையில் அரசியல் தீர்வு காணப்படுவதைப் புதிய இடதுசாரி முன்னணி பிரதான கோரிக்கையாக முன்வைத்து, சிங்கள மக்கள் மத்தியில் கூட்டங்கள், பேரணிகள், கருத்தரங்குகள், சத்தியாக்கிரகம் போன்றவற்றை முன்னெடுப்பதில் தோழர் விக்ரமபாகு வகித்த முன்னணிப் பாத்திரம் தோழமையுடன் நினைவுகூரத்தக்கதாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிக்குகள் நாடாளுமன்றம் செல்லத் தேவையில்லை

## ஞானசாரர் தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 27

பிக்குமார் நாடாளுமன்றம் செல்லத் தேவையில்லை. ஆனால் நாட்டின் கலாசாரத்தைப் பாதுகாக்க வேண்டியது பிக்குகளின் கடமை. அதைத்தான் நான் செய்கிறேன் -இவ்வாறு பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேற் கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றம்தான் சட்டத்தை இயற்றும் இடம். நாடாளுமன்றத்துக்கு வெளியே பேசுவதால் எதுவிதப் பிரயோசனமுமில்லை. பாரம்பரிய முஸ்லிம்களிடத்திலிருந்து தகவல்களைத் திரட்டியுள்ளேன். பயங்கரவாதக் குழுக்களுக்கு இடமளிக்கக் கூடாது. நான் நாடாளுமன்றத்துக்கு வெளியே பேசும் ஒவ்வொரு தடவையும் வெறுப்பூட்டும் பேச்சு என தீவிரவாதக் குழுக்கள் என் மீது குற்றம் சுமத்துகின்றன.

அவர்களின் போதனைகளின்படி, மக்களைக் கொல்லமுடியும். அதை யாரும் மறுக்கமுடியாது. நாம் குரல் எழுப்பினால் பதிலடி கொடுக்கிறார்கள். கழுத்தை அறுத்தாலும் தலை குனியவேண்டும் என்று உலகில் எங்கும் பௌத்தம் போதிக்க வில்லை - என்றார்.

(ஓ-6)

# சர்வதேச புத்தகத் திருவிழா யாழ். நகரில் 3 தினங்கள்

யாழ்ப்பாணம், ஜுலை 27

யாழ்ப்பாண வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் ஏற்பாட்டில், 'சர்வதேச புத்தகத் திருவிழா' எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரையான மூன்று தினங்கள் யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கையிலிருந்து மாத்திரமல்லாமல் பல்வேறு நாடுகளிலிருந்தும் பல்வேறுபட்ட புத்தக விற்பனை நிறுவனங்கள் மற்றும் வெளியீட்டகங்களின் புத்தகங்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப் படவுள்ளன.

இந்தக் கண்காட்சிக்கான அனுமதி இலவசம். 40 காட்சிக் கூடங்கள் அமைக்கப்படவுள்ளதுடன் அவற்றில் உள்ளூர், வெளியூர் எழுத்தாளர்களின் புத்தகங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

புத்தகத் திருவிழா இடம்பெறும் தினங்களில் நூல் வெளியீடுகள், அறிமுக நிகழ்வுகள் மற்றும் கலை, கலாசார நிகழ்வுகள் என்பவற்றுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ப-66,125,20)

## தேவை

யாழ். ஆஸ்பத்திரி வீதியில்
இயங்கும் ஸ்தாபனத்திற்கு பெண்
உதவியாளர் தேவை - பில் கிளர்க்.
யாழ் மாநகர சபைக்கு
உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:
**077 484 5379, 077 025 9877, 021 222 7893**

(CS/55763) J-1

## தவறவிடப்பட்டுள்ளது

Dr.பொன்னம்பலம் சந்திரசேகரம் ஆகிய
எனது தேசிய அடையாள அட்டை
(இலக்கம் **383390176V**) யும் வாகன ஓட்டுநர்
அனுமதிப்பத்திரமும் கொண்ட பர்ஸ்
24.07.2024 முதல் காணாமல் போயுள்ளது.
கண்டெடுத்தவர்கள் தயவு செய்து
**கெங்காதரன் வைத்தியசாலை**
**VAN WEST CLINIC AND NURSING HOME**
இல 60 ஐயனார் கோவில் வீதி,
(காங்கேசன்துறை வீதி ஊடாக)
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் என்னும்
முகவரியில் உள்ள உரிமையாளரிடம்
ஒப்படைத்தால் ரூபா **50,000/-**
சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு :- **021 222 1697**

(CS/55767) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 09 . 1949



மறைவு
26 . 07 . 2024

### ஐயாத்துரை சிவநேசன்

**(உரிமையாளர்-சிவாஸ் ஸ்ரோர்ஸ் சின்னக்கடை)**

புங்குடுதீவு-4ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 10ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்போது வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சிவநேசன் அவர்கள் நேற்று (26.07.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்துவேல் நாகம்மா தம்பதியரின் மருமகனும் கலைவாணியின் அன்புக் கணவரும் பாலரூபி (ரூபி-RK Ceramic) கஜேந்திரநாத் (கஜன்-Ceat Kelani Interntional Tyres (pvt) Ltd ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகன் (RK Cramic), அஜந்தா (கல்வி அமைச்சு-வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கேசிகா, நிக்ஷிகா ஆகியோரின் அன்புக் பேரனும் ஜெகநாதன்-கலைமணியின் (Canada) அன்பு மைத்துனரும் ரவீந்திரநாதன் கருணாவதி (RK & son Electronic) மற்றும் மன்மதராசா தனலட்சுமி (MMR Tyres and oil Shop) ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.07.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக 10.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
கஜன் 0717896164
ரூபி 0770243416
ஜெகன் 0776660699

இல-37 வேம்படி வீதி
யாழ்ப்பாணம்.

(CS/51009) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
12 . 07 . 1951



மறைவு
24 . 07 . 2024

### தர்மகுலசிங்கம் புஸ்பேஸ்வரி

23/4 ஈச்சமோட்டை வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தர்மகுலசிங்கம் புஸ்பேஸ்வரி (சின்னக்கிளி - யாழ் போதனா வைத்தியசாலையின் ஓய்வுபெற்ற வைத்திய உதவியாளர்) கடந்த (24.07.2024) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்திப்பிள்ளை - கண்மணி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான பரமசாமி - கனகம்மா தம்பதியரின் மருமகளும், தர்மகுலசிங்கம் (புண்ணியம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திலகவதி மற்றும் திலகேஸ்வரி, மகேஸ்வரி, தவபாலன், பூபாலன், ரஞ்சினி காலஞ்சென்ற ரதினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகேஸ்வரி, கனகாம்பிகை, துரைராசா, நடராசா, அருளம்பலம், செல்வராணி காலஞ்சென்றவர்களான சரோஜினிதேவி, சுப்பிரமணியம், நடராசா மற்றும் தர்மலிங்கம், ஞானமலர், நிர்மலா, உதயகுமார் ஆகியோரின் மைத்துனியும், ஸ்ரீலிங்கம், சுறாஜ், சுதர்சினி, சுறாஜினி, சுதர்சன், கஜந்தினி ஆகியோரின் சிறியதாயும், பேர்லினி, றொகான், ஜெனிஷன் ஆகியோரின் பெரியதாயும், ஸ்ரீத்தா, சாதனா, பிரவீன், ரிஷபன், ஆரோன், நிந்துஜன், கரிஸ்சாந், தர்ஷனா, லிபிஷன், விகாஷ், சாயித்தியா, நிதுஷன், நிஷானிகா, எஸ்றின், ஆரூஜன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.07.2024) ஞாயிற்றுக்கிழமை 9A விதானையார் வீதி, ஈச்சமோட்டை என்னும் முகவரியைக் கொண்ட இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 753 5076**
**077 969 0935**

9A விதானையார் வீதி,
சுண்டிக்குளி.

(CS/55759) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கறுவாச்செய்கை அறிமுக நிகழ்வு

கிளிநொச்சி, ஜூலை 27
'வளம் தரும் வாசனைப் பயிரை வரவேற்போம்' என்ற தொனிப் பொருளில் உலர் வலயத்தில் கறுவா பயிர்ச்செய்கை அறிமுக நிகழ்வு மற்றும் பதப்படுத்தல் செயன்முறை விளக்க நிகழ்வு என்பன கிளிநொச்சி, வட்டக்கச்சி விவசாயத் திணைக்களப் பயிற்சி நிலையத்தில் அண்மையில் நடைபெற்றன. மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் சூ.ஜெகதீஸ்வரி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் விஜயபாஸ்கர், வடமாகாண விவசாயப் பணிப்பாளர் செ.சுகந்தினி, காலநிலைக்கு சீரமைவான விவசாயத்திட்டத்தின் பணிப்பாளர் பாபு, உத்தியோகத்தர்கள், விவசாயிகள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-113-13)



# தொண்டைமானாறு வீதி; புனரமைத்துத் தாருங்கள்

**யாழ்ப்பாணம், ஜூலை 27**
**அச்சுவேலி - தொண்டைமானாறு வீதியைப் புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**



குறித்த வீதி, மிக மோசமான நிலையில் சேதமடைந்துள்ளமையால், வீதியால் பயணிப்பவர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர்.
யாழ்ப்பாணத்தில் பருவமழை காலத்தில் தொண்டைமானாறு நீர் குறித்த வீதியின் மேலாகப் பாய்ந்து ஓடுவதால், மழைகாலங்களில் வீதிகளில் பெரியகுழிகள் தோன்றி பயணிக்கமுடியாத அளவுக்கு மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது. எதிர்வரும் 4ஆம் திகதி செல்வச் சந்நிதி ஆலய வருடாந்தத் திருவிழா ஆரம்பமாகவுள்ளது.
எனவே, வீதியைத் தாற்காலிகமாக புனரமைத்து, தமது போக்குவரத்தை இலகுபடுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-20)



# தமிழ்த் தலைமைகள் ஒதுங்கி வழிவிடுங்கள்

*காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர் சங்கம் வலியுறுத்து!*

யாழ்ப்பாணம், ஜூலை 27
தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்க புதிய தலைமையையும் வரவேற்கிறோம். இதுவரையில் தமிழ் அரசியல் தலைவர்களால் எங்களுக்கு இழுத்தடிப்பும் காலவிரயமுமே எஞ்சியுள்ளது. எனவே புதிய மாற்றத்துக்காக தற்போதுள்ள தமிழ்த் தலைவர்கள் அரசியலிலிருந்து ஒதுங்க வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் சங்கம் கோரியுள்ளது.
இதுதொடர்பில் சங்கச் செயலாளர் கோ. ராஜ்குமார் மேலும் கூறுகையில்;
காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் நீதியை பெற்றுக்கொள்வதற்காக தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.
எமது உறவுகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு சர்வதேச நீதியோ, பொறுப்புக் கூறல்களோ கிடைக்கப்பெறவில்லை. தமிழ்த் தலைமைகளால் எவ்வித தீர்வும் எட்டப்படவில்லை. காலம்கடந்த நீதி மறுக்கப்பட்ட நீதிக்குச் சமம். எனவே எமக்கான நீதியைப் பெற்றுக்கொள்ள புதிய தலைமையை நாம் வரவேற்கிறோம். அதற்குத் தற்போதுள்ள தமிழ்த் தலைமைகள் வழிவிடவேண்டும்- என்றார். (ப-110)



*யாழ்.பல்கலையின்*

# சொட்டு நீர்ப்பாசனமுறை கிளிநொச்சியில் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 27
யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடத்தின் நவீன தொழில்நுட்ப முறையிலான சொட்டு நீர்ப்பாசன முறை மூலமான கத்தரிப் பயிர்ச்செய்கை நல்ல விளைச்சலைத் தந்துள்ளது.
பல்கலைக்கழகத்தின் அறிவியல்நகரில் அமைந்துள்ள விவசாய பீடத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சமுதாய மேம்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில், கிளிநொச்சி, திருவையாறு பகுதியிலுள்ள விவசாயி ஒருவரின் காணியில் மேற்கொண்ட கத்தரிப் பயிர்ச்செய்கையே வெற்றியளித்துள்ளது.
அதன் அறுவடைவிழா கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. அறுவடைவிழாவில் வடமாகாணத்தின் பிரதம செயலாளர் இ.இளங்கோவன், மாவட்ட பதில் செயலர் ச.முரளிதரன், வடக்கு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் ந.சுதாகரன், வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் செ.சுகந்தினி, யாழ்.பல்கலைக்கழகத்தின் அறிவியல்நகரில் அமைந்துள்ள விவசாய பீடத்தின் பீடாதிபதி, விவசாயிகள் மற்றும் விவசாய பீடத்தின் மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ப-113)

# கையெழுத்து சேகரிப்பு மன்னாரில் ஆரம்பிப்பு


மன்னார், ஜூலை 27
தேர்தல் காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும் எனக் கோரி, கையெழுத்துப் பெறும் வேலைத்திட்டம் அண்மையில் மன்னாரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ப-56)



# கருத்தூட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜூலை 27
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாட்டில், வினைத்திறனான அரசசேவையை வழங்குவதற்கான கருத்தூட்டல் செயலமர்வு, கடந்த புதன்கிழமை யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது.
நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலக நிறைவேற்று, பதவிநிலை உத்தியோகத்தர்கள், அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் டிலாந்தி சிறிவர்த்தன மற்றும் சகுந்தலை ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-66)





நெடுந்தீவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நெடுவூர்த் திருவிழா தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல், யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட பதில் செயலர் ம.பிரதீபன் தலைமையில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது. கலந்துரையாடலில் துறைசார்ந்த திணைக்களங்கள் மற்றும் பொது அமைப்புகள் ஆகியன பங்கேற்றன. (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் வலுப்படுத்தல் வர்த்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்ப்பாணத் தொழிற்றுறைகளைப் பிரபல்யப்படுத்தி மேம்படுத்தும் நோக்குடன், 'யாழ்ப்பாணம் எக்ஸ்போ 2024' எனும் வர்த்தகக் கண்காட்சி, முற்றவெளி மைதானத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. கண்காட்சிக்கான அனுமதி இலவசம் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

கட்டுமானம் மற்றும் பிற தொழிற்றுறைகளில் பங்காளர்களுக்கு தங்கள் தயாரிப்புகளைக் காட்சிப்படுத்த ஒரு தளத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பை வழங்கும் நோக்கில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் தெற்கு வர்த்தக இணைப்புகளை வலுப்படுத்தும் இந்தக் கண்காட்சியில் கட்டுமானம் சார் இயந்திரங்கள், உபகரணங்கள், விவசாயம் சார் உபகரணங்கள், மின் உபகரணங்கள், கைவினைப் பொருள்கள், செராமிக் மற்றும் கண்ணாடிப் பொருள்கள், வீட்டு உபயோகப் பொருள்கள், சுகாதாரம், உணவு மற்றும் உடைகள் போன்ற பல துறைகளில் உள்ள தயாரிப்புகள் மற்றும் சேவைகள் காட்சிப்படுத்தப்படவுள்ளன எனத் தெரிவித்தனர். (ப-20)



பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்டம் மற்றும் பிரதேச அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் மாவட்ட பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை நடை பெற்றது. (ச-25-66)

# மானிப்பாய் வாள்வெட்டுக் குழு: கைதானவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 27

மானிப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக வைத்து, பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட வாள்வெட்டுக் குழுவொன்றைச் சேர்ந்த நபருக்கு நீதிமன்றத்தால் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் – கட்டுடைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில், குடும்பப் பெண்ணொருவர் உயிரிழந்தார். இதையடுத்து, மானிப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக பொதுமக்கள் ஒன்றுகூடி இந்த இறப்புக்கு நீதியைப் பெற்றுத் தருமாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது மூன்று மோட்டார்சைக்கிள்களில் வாள்களுடன் சிலர் வந்ததால் பொதுமக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டது. மக்கள் உசாரடைந்ததையடுத்து இரண்டு மோட்டார்சைக்கிள்களில் வந்தவர்கள் தப்பித்தோடிய நிலையில், ஒரு மோட்டார்சைக்கிள் பெற்றோல் இல்லாமல் நின்றுள்ளது. அந்த மோட்டார்சைக்கிளின் பின்னால் வாளுடன் இருந்தவர் மோட்டார்சைக்கிளைவிட்டு இறங்கித் தப்பித்தோடினார். மோட்டார்சைக்கிளுடன் நின்றவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். அவர் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோதே அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. ஏனையவர்கள் பொலிஸாரால் தேடப்பட்டுவருகின்றனர்.

மேலதிக விசாரணைகளின்போது, இந்தக் குழுவினர் பிறிதொரு பகுதியில் இடம்பெற்ற வன்முறையுடன் நேரடித் தொடர்புடையவர்கள் என்பதும், அந்த வன்முறையில் ஈடுபட்ட பின்னரே பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக மிகச்சாதாரணமாக நடமாடித் திரிந்துள்ளனர் என்பது தெரிய வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-125)

# ரணிலே வருவார்

கொழும்பு, ஜூலை 27

வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கதெரிவித்துள்ளார்.

எமது அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் நட்டமடையும் நிலை யைத் தவிர்த்து இலாபம் ஈட்டும் நிலைக்கு வந்துள்ளன. உலகில் கடுமையான பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள ஏனைய நாடுகள் இவ்வளவு குறுகிய காலத்தில் பொருளாதார ஸ்திரத்தன்மையை எட்டவில்லை.

எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வுக்கு எமது ஆதரவை வழங்குவோம் என்றும் அவர் குறிப்பிட் டார். (ச-இ)

# கட்டுடை ஹைஏஸ் விபத்து: கைதானவர்களுக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 27

மானிப்பாய் - கட்டுடையில் நேற்றுமுன்தினம் ஹைஏஸ் வாகனமொன்று மோதி, 46 வயதான குடும்பப் பெண்ணொருவர் உயிரிழந்த நிலையில் கைது செய்யப்பட்ட இருவரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த ஹைஏஸ் வாகனத்தில் நால்வர் பயணித்த நிலையில், விபத்தையடுத்து இருவர் தப்பியோடியிருந்தனர். எனினும் இருவரை பொலிஸார் கைது செய்திருந்தனர். அவர்கள் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோதே மேற்படி சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர் வாகனத்தின் சாரதி என்றும் மற்றையவர் உரிமையாளர் என்றும் பொலிஸார் தெரிவித்திருந்த நிலையில், பொலிஸாரின் கூற்றுக்கு மறுப்புத் தெரிவித்த பொதுமக்கள், வாகனத்தின் சாரதி தப்பியோடிவிட்டார் என்றும், அவர் கைதுசெய்யப்பட்டு சட்டத்தால் தண்டிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்து பொலிஸ் நிலையத்தின் முன்பாக நேற்றுமுன்தினம் இரவு போராட்டத்தை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-125-20-27)

# இராணுவ முகாமுக்கு பின்புறமாக வயோதிபரொருவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

நாகர்கோவில் - நாச்சிமார் கோவிலடி இராணுவ முகாமுக்கு பின்புறமாக வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை இரவு மீட்கப்பட்டுள்ளது.

மன்னாரைச் சேர்ந்த தங்கராஜா பெனாண்டு (வயது-78) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட வராவார்.

சடலத்தை அவதானித்த மக்கள், இராணுவ முகாமுக்குத் தகவல் வழங்கியுள்ளனர். மேற்கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா இரவு சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை மருதங்கேணிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-100)



தென்மராட்சி தெற்கு, கோவிலாக்கண்டி செல்வா முன்பள்ளி சிறார்களின் 'செயற்பட்டு மகிழ்வோம்' நிகழ்வு, அண்மையில் முன்பள்ளி முன்றலில் நடைபெற்றது. முன்பள்ளி முகாமைத்துவக் குழுத் தலைவர் திருமதி கி.திவ்வியா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், முதன்மை விருந்தினராக [illegible] பணிப்பாளர் பீ.முத்துலிங்கம் கலந்துகொண்டார். (ப-9)


# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 | 24 |
| 10 | 07 |
| 1952 | 2024 |

**திருமதி. நந்தாவதி சுப்ரமணியம்**

தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும், மட்டுவில் மற்றும் மகரகமவை வதிவிடமாகவும் கொண்ட நந்தாவதி சுப்ரமணியம் அவர்கள் **24-07-2024** அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற நாகேந்திரம் அருமைமுத்து தம்பதிகளின் புதல்வியும் சுப்ரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் ஆவார். அன்னார் திலகவதி, அருமைரத்தினம், நவரத்தினம், குலரத்தினம், திலகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தெய்வானை, நாகலிங்கம், சங்கரப்பிள்ளை, கந்தையா, வேலுப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் உமாசுதன், கோபிசுதன், சர்மிளா ஆகியோரின் அன்புத் தாயும் கன்னியாகுமாரி, காயத்ரி ஆகியோரின் அன்பு மாமியாரும் மற்றும் காருண்யா, அச்சுதன், ஆராதனா, தாமிரா ஆகியோரின் பாட்டியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக மகரகம ரோகினி மலர்ச்சாலையில் **(Rohini Funeral Directors) 27**ம் திகதி சனிக்கிழமை காலை **8.00** மணியிலிருந்து மாலை **8.00** மணிவரை வைக்கப்பட்டு, **28**ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் **12.30** மணிக்கு கிரியைகள் நடைபெற்று **2.00** மணியளவில் தகனக்கிரியைகளுக்காக மகரகம கொடிகமுவ மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

அனைவரும் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: சு.உமாசுதன் (மகன்) 0773506707
சு.கோபிசுதன் (மகன்) 0777677664
சு.சர்மிளா (மகள்) 0775816702


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதித்...

இது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தலும் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அத்துடன் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கையும் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

சிறிலங்கா ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கடந்த சில மாதங்களாகவே இழுபறி நிலை நீடித்து வந்தது. தேர்தல் நடக்குமா? நடக்காதா? என்பது தொடர்ந்து விவாதப்பொருளாக இருந்துவந்த நிலையில், தேர்தலைத் தீர்மானிக்கும் அதிகாரம் ஜூலை மாதம் 17ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவின் கரங்களுக்குள் வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்தே தேர்தல்கள் ஆணைக்குழு நேற்றுக்காலை கலந்தாலோசித்து செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதியை ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியாக நிர்ணயித்துள்ளது.

கடந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இம்முறையும் பலர் களமிறங்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதுவரை 12 வேட்பாளர்கள் தாம் போட்டியிடப் போவதை உறுதிசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## பாணின்....

இந்த நிலையிலேயே பாணின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், ஏனைய வெதுப்பகப் பொருள்களின் விலையில் மாற்றமில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலும் இந்த விலை குறைப்பு உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் என்று யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கச் செயலர் க.பாஸ்கரன் தெரிவித்துள்ளார். (அ-ம-ஒ,5)

## ஜனாதிபதி ரணில்...

பர் மாதம் 21ஆம் திகதி நடத்தப்படுமெனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ள நிலையிலேயே இவ்வாறு கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, காலியில் இன்று நடைபெறும் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் வைத்து, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தனது அறிவிப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தும் காலவரையறை, நேற்று ஆரம்பித்து ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதிவரை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## நாங்கள்...

வில்லை. அரசமைப்புக்கு ஏற்பவே நியாயமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் எந்தவொரு தவறான தீர்மானத்தையும் எடுக்கவில்லை. அரசமைப்புக்கு அமைய நியாயமான, சரியான தீர்மானத்தை ஆழமாக சிந்தித்துதான் எடுத்துள்ளோம். உங்களுக்கும் (எதிர்த் தரப்பினரை விழித்து) ஏனையோருக்கும் அந்த தீர்மானம் தவறாகத் தோன்றலாம். ஆனால் நாம் மனச்சாட்சிக்கமைய சரியான முறையிலேயே அந்த தீர்மானத்தை எடுத்தோம்.

நான் வீட்டிலிருந்து இந்த தீர்மானத்தை எடுத்தாகக் கூறியமை முற்றிலும் பொய்யாகும். அரசமைப்பின் உறுப்புரைக்கமையவே எனக்கான வாக்கினை நான் பயன்படுத்தினேன். 41 உறுப்புரைக்கமைய அரசமைப்புப் பேரவையின் அனுமதியுடனும் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துடனும் பொலிஸ் மா அதிபர் நியமனம் நியாமானது.

எனவே இந்த பதவியில் வெற்றிடம் ஏற்பட்டால் அதனை தீர்ப்பதற்கு படிமுறைகள் உள்ளன. அல்லது நீதிமன்றமே இதற்கான தீர்வினை வழங்க வேண்டும். ஜனாதிபதியால்கூட இது தொடர்பில் தீர்மானிக்க முடியாத நிலைமையே தற்போது காணப்படுகிறது என்றார். (ம)

## சட்டச்....

அறிவித்துள்ளார்.

உயர்நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டது இடைக்கால தடை உத்தரவு மாத்திரமே என்பதால் பொலிஸ்மா அதிபர் பதவி வெற்றிடமாகவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்கவுக்கு சட்ட ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அதன்படி, 21ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் பிரகாரம் பொலிஸ்மா அதிபர் பதவி வெற்றிடமாகாத ஒரு சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியால் பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்க முடியாது. உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி, பொலிஸ்மா அதிபர் தனது கடமைகளை மேற்கொள்வதற்குத் தடையுத்தரவு மாத்திரமே விதிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய சட்ட சிக்கல்களை தீர்க்கும் வரையில் பொலிஸ்மா அதிபர் பதவி அவ்வாறே இருக்கும் என்றும் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (அ-ச-இ)

## ஜனாதிபதி....

மனம் தொடர்பில் உயர்நீதிமன்றம் விடுத்துள்ள இடைக்கால உத்தரவை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளவேண்டும். தேசபந்து தென்னக்கோனின் நியமனம் அரசமைப்பில் பொருந்தக்கூடிய விதிகளுக்குள் இல்லை.

ஜனாதிபதி இந்த பிரச்சினையிலிருந்து தப்பியோடமுடியாது. ரணில் விக்கிரமசிங்க இன்னமும் ஜனாதிபதிதான். அவர் ஜனாதிபதி வேட்பாளர் என்பதால் தனது கடமைகளைப் புறக்கணிக்க முடியாது. இதனை செய்ய முடியாவிட்டால் அவர் பதவிவிலகவேண்டும் - என்றார். (அ-ம)

## ட்ரூடோவுக்கு...

வெளியிட்ட கருத்துக்கு இலங்கையின் வெளிவிவகார அமைச்சு கண்டனம் தெரிவித்துள்ளது. கறுப்பு ஜூலை தொடர்பில் பிரதமர் ட்ரூடோ அண்மையில் அறிக்கையிட்டிருந்தார். அந்த அறிக்கையில், 1983ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைகள் மற்றும் வன்முறைகள் தொடர்பில் ட்ரூடோ தெளிவுபடுத்தியிருந்தார். அத்துடன், தமிழர்களின் உரிமைக்காக கனடா தொடர்ந்தும் குரல் கொடுக்கும் என்றும், தமிழர்களுக்காக தாங்கள் இருக்கின்றோம் என்ற நம்பிக்கையையும் ட்ரூடோ வெளிப்படுத்தியிருந்தார். இந்த நிலையிலேயே, ட்ரூடோவின் இந்த அறிவிப்பும் கருத்துக்களும் கனேடிய வாக்கு வங்கியைக் கருத்தில்கொண்டு விடுக்கப்பட்ட போலியான கூற்றுக்கள் என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் இனங்களுக்கு இடையிலான நல்லிணகத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் தொடர்ச்சியான முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ள நிலையில், அத்தகைய முயற்சிகளுக்கு தடங்கலை ஏற்படுத்தும் வகையில் ட்ரூடோவின் கருத்துக்கள் அமைந்துள்ளன. இந்தக் கருத்துக்கள் கனடாவிலோ அல்லது இலங்கையிலோ இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது என்றும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம-6)

## கூலிப்படையை...

பரந்தன் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவரே யாழ்ப்பாணப் பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அனலைதீவில் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி கனேடிய தமிழ்க் குடும்பமொன்றின் மீது வன்முறை கும்பலொன்று வாள்வெட்டு தாக்குதலை நடத்தியதுடன், பெருமளவு வெளிநாட்டு நாணயம் மற்றும் பொருள்கள், நகைகள் என்பனவற்றையும் கொள்ளையடித்துச் சென்றது.

குறித்த சம்பவம் தொடர்பில் யாழ். பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன் மூன்று பேர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். எனினும் பிரதான சந்தேகநபர் தொடர்ந்தும் தலைமறைவாகவே இருந்தார். இந்த நிலையில், வெளிநாட்டில் உள்ள ஒருவரின் பணிப்பின் பேரில் உள்ளூரில் கூலிப் படையை வைத்து தாக்குதலை ஒழுங்கமைத்த பிரதான சந்தேகநபரான அந்தப் பெண் தற்போது கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கனடாவில் உள்ள ஐயப்பன் கோயிலொன்றின் தலைவரின் அறிவுறுத்தலுக்கு அமையவே இந்தத் தாக்குதலை ஒழுங்கமைத்ததாக அவர் வாக்குமூலம் வழங்கியுள்ளார். வாக்குமூலத்துடன் தொடர்புடைய ஆதாரங்களும் பொலிஸாரால் சேகரிக்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## ஒலிம்பிக்...

டிருந்தன. பரிஸின் மையப்பகுதியை ஊடறுத்துப் பாய்ந்து கொண்டிருக்கும் நதிவழியாக கப்பல்களில் வீர, வீராங்கனைகள் அழைத்துவரப்பட்டனர். நவீன ஒலிம்பிக் வரலாற்றில் மைதானத்துக்கு வெளிப்புறமாக இவ்வளவு பிரமாண்டமாக வீர, வீராங்கனைகளின் அணிவகுப்பும் வரவேற்பும் இடம்பெறுவது இதுவே முதல்முறையாகும். நதி அணிவகுப்பு ஒரு புறம் நடந்துகொண்டிருக்க, மறு பக்கத்தில் பரிஸ் வானம் அதிசயமான ஒளிக் கதிர்களால் மிளிரச்செய்யப்பட்டது. ஒப்பற்ற இந்த வரலாற்று நிகழ்வின் போது ஈபிள் கோபுரம் இதுவரை பார்த்திராத லேசர் கதிர்களால் அலங்கரிக்கப்பட்டது. ஒலிம்பிக் ஆரம்ப விழாவை முன்னிட்டு, பரிஸ் வான் பரப்பு ஆறு மணித்தியாலங்கள் மூடப்பட்டு சாகசங்கள் இடம்பெற்றன. சாகசங்களை நிகழ்த்தும் விமானங்கள் வானத்தில் பிரமாண்டமான இதயம் ஒன்றை வண்ணக் கலவைகளால் வரைந்தன. 'பரிஸின் இதயம்' என்று அழைக்கப்படும் நொத்த டாம் தேவாலயத்துக்கு மேலே வானத்தில் இந்த இதயம் வரையப்பட்டது. (அ-ம)

## இளைஞனைக்

கிளிநொச்சியில் இருந்து காதலியை பார்ப்பதற்காக யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதிக்கு இளைஞர் ஒருவர் வந்துள்ளார். இதன்போது அங்கு கூடிய இனந்தெரியாத நபர்கள் இளைஞனை ஓட்டோவில் ஏற்றிச்சென்று தலைமுடியைப் பிய்த்தும், வாளால் வெட்டியும் அவரைச் சித்திரவதை செய்துள்ளனர். இதன்பின்னர் குறித்த இளைஞனை உடுவில் பகுதியிலுள்ள வீதியொன்றில் போட்டுவிட்டு அந்தக் குழு தப்பிச் சென்றுள்ளது. இதையடுத்து அந்த இளைஞர் யாழ்ப்பாணம் போதனா மருத்துமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-26,27)

## திறன்பேசிகள் திருட்டு இருவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்ப்பாணத்தில் திறன்பேசியைத் திருடிய ஒருவரும், அதைக் கொள்வனவு செய்த மற்றொருவருமாக இருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கன்னாதிட்டிப் பகுதியில் அமைந்துள்ள சமுர்த்தி அலுவலகத்தில் பணிபுரியும் உத்தியோகத்தரது திறன்பேசி கடந்த 14ஆம் திகதி காணாமற்போனது. இது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்ட நிலையில், மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைவாகவே திறன்பேசியைத் திருடியவர் கைதுசெய்யப்பட்டார். இதையடுத்து அவரிடம் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளின்போது, அலைபேசியை பிறிதொருவரிடம் விற்றுவிட்டதாக அவர் தெரிவித்துள்ளார். இதையடுத்து திறன்பேசியைத் திருடியவரும், அதைப்பெற்றுக்கொண்டவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-26,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதிகளுக்கும் வாக்கு: மனு விசாரணைக்கு

கைதிகளுக்கும் வாக்களிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமெனக்கோரி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

மனு மீதான விசாரணையின்போது தேர்தல்கள் ஆணையாளர், நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ஆகியோரை 8ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-6)


## வங்கி மீதி வசதி (SHOW MONEY)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

074 173 7684

(CS5588) J-1

## காணி விற்பனைக்கு

வலிகாமம் மேற்கு, விளான் சந்தியில் இருந்து சேந்தாங்குளம் வீதி செல்லும் 1/4 Km தூரம், பிரதான வீதியில் 22 பரப்புக் காணியும் அதில் உள்ள 2 பழைய வீடுகளும் விற்பனைக்குண்டு. தரகர்கள் தொடர்புகொள்ளவேண்டாம்.

தொடர்பு: 070 532 8226, 075 810 6917

## வீடு விற்பனைக்கு

நல்லூர் கந்தசுவாமி கோவிலிலிருந்து 5 நிமிட நடைதூரத்தில் ஐந்து அறைகள் கொண்ட வீடு, வீட்டுத் தளபாடங்களுடன் விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை.

சனி, ஞாயிறு காலை 10.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை பார்வையிடலாம்.

தொடர்பு:- 077 796 3186

(CS/55720) J-1

## aat கருத்தரங்கு BMS - 102

வியாபாரக் கணிதமும் புள்ளிவிபரவியலும்

சிறப்புத் தேர்ச்சி பெற்ற வளவாளரினால் யாழ்நகரில் August 10 ஆம், 11 ஆம் திகதிகளில் பி.ப.1.15 இற்கு ஆரம்பமாகும்

59, ஆரியகுளம் நோக்கிய வீதி, யாழ்நகர்.

விரிவான விபரங்களுக்கு:

aat Business Mathematics and Statistics

விரிவுரையாளர் 077 663 0793

(CS/55727) (N-1)

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

கோண்டாவிலில் அமைந்துள்ள சமையலறை சார் உபகரணங்கள் மற்றும் மின்னியல் சாதனங்கள் விற்கும் மொத்த / சில்லறை வியாபார நிலையமான FAP LANKA (PVT) LTD இற்கு இரு விற்பனைப் பிரதிநிதிகள் வேலைக்குத் தேவை.

தொடர்பு:- 076 200 1700

## தேவை

இல 131, பலாலி வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பெண் பராமரிப்பாளர் மற்றும் சமையல் உதவியாளர் தேவை.

வயதெல்லை (25-40)

➤ பராமரிப்பாளர் :- க.பொ.த (சா/த) பூர்த்தி செய்துள்ளதுடன் க.பொ.த (உ/த) கற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு:-

021 222 8490, 021 721 0910

(CS/55722) J-1

## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழில் இயங்கிவரும் பிரபல உயர்தர சைவ உணவகம் ஒன்றிற்கு உணவு பரிமாறுபவர்கள் (waiter) வயது 18-40 வரை உள்ள ஆண்கள் தேவைப்படுகின்றனர் உணவு, தங்குமிட வசதி இலவசமாக தரப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:

077 829 5658, 077 361 1301

(CS 1009) V-1

## காணி தேவை

வட்டுக் கோட்டை, கட்டுவன், புத்தூர் பகுதியில் காணி தேவை

தொடர்புகளுக்கு:

077 374 4652

## நெல் அறுவடையாளர்களுக்கு

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட **நெல் சூடடிக்கும் இயந்திரம்** எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். மணித்தியாலத்திற்கு 2 தொன் நெற்கதிர் அடிக்கக்கூடியதும் டிராக்டரில் பொருத்தி இயக்கக் கூடியதுமானது.

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"




ஆர்க். என். கம்பனி

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 973 9917


## மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 03 . 1950

மறைவு 26 . 07 . 2024

### சின்னத்துரை செல்வரத்தினம் (பெரியாம்பி)

புன்னாலைக்கட்டுவன் தெற்கை பிறப்பிடமாகவும் கீரிமலை, இளவாலை, மற்றும் புன்னாலைக்கட்டுவனை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை செல்வரத்தினம் அவர்கள் நேற்று (26.07.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நரசிங்கம்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் தேம்பாமலர் (ரமணி) அவர்களின் அன்புக் கணவரும் பவதாசன் (உரிமையாளர் சிவன் அரிசி ஆலை இளவாலை) லோஜினி (ஆசிரியர் யா/வசாவிளான் மத்தியகல்லூரி), துசியந்தினி (தாதிய உத்தியோகத்தர் யாழ் போதனாவைத்தியசாலை) ஆகியோரின் அன்புத்தந்தையும் சிறிகௌரி (அபிவிருத்தி உத்தியோகத்தர் சண்டிலிப்பாய் பிரதேசசெயலகம்) கிரிசாந்த் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேசசபை நெடுந்தீவு) தினேஸ் (ஆசிரியர் சென் ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கேதாரணி, லக்ஷயன், அகரன், ஆருத்ரன், விசாகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.07.2024) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பலாலி வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு
சுன்னாகம்

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 55766) V-1

## மரண அறிவித்தல்



மலர்வு 23 . 10 . 1959

உதிர்வு 22 . 07 . 2024

### கிருஷ்ணராஜா இரட்ணராணி (ஆச்சி)

**சாம் குடும்பத்தின் குலவிளக்கு அணைந்துபோனதே !**

மானிப்பாய் வீதி உடுவிலைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணராஜா இரட்ணராணி (ஆச்சி) கடந்த (22.07.2024) திங்கட்கிழமை லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமுவேல் - இரத்தினம் தம்பதியரின் பாசமிகு மகளும், கதிர்காமு - சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், கிருஷ்ணராஜா அவர்களின் அன்பு மனைவியும், தர்மினி, பிரசாந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகிந்தன் அவர்களின் பாசமிகு மாமியாரும், அக்ஷயன், அபிராமி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், தேவரட்ணம், சிறீதரன், காலஞ்சென்ற கனகரட்ணம், தேவராணி மற்றும் பத்மராஜன் (பிரான்ஸ்), புஸ்பராணி (கொழும்பு), ஜெயராணி (லண்டன்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.07.2024) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெற்று தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சிவஞானப்பிள்ளையார் கோவிலடி,
மானிப்பாய் வீதி,
உடுவில்.

(CS/1005) J-1

தகவல்:
சி.சிறீவாணன் (மருமகன்)
077 222 4186



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.